## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1987 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, தனியார் வசுவண்டிச் சேவைகள் (திருத்தம்) சட்டம்

---

*[1987, ஜூன் 25 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1987, யூன் மாதம் 26 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 30 — தபாற் செலவு : சதம் 75

## 1987 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, தனியார் வசுவண்டிச் சேவைகள் (திருத்தம்) சட்டம்

[1987 ஜூன் 25 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

• வ.—ஒ. 45/86
1850

### 1983 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கத் தனியார் வசுவண்டிச் சேவைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டமானது, 1987 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, தனியார் வசுவண்டிச் சேவைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம்.

1983 ஆம் ஆண்டின் 44 இலக்கச் சட்டத்தின் 28அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

2. 1983 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கத் தனியார் வசுவண்டிச் சேவைகள் சட்டத்தின் (1985 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்டவாறான) 28அ என்னும் பிரிவானது, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(1) தனியார் வசுவண்டிகளின் பிரத்தியேகப் பயன்பாட்டிற்கென ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கும் வசுத் தரிப்பு நிலையமொன்றின் பயன்பாட்டிற்காக, தனியார் வசுவண்டி ஒன்றின்மீது உள்ளூரதிகார சபையொன்றினால் விதிக்கப்படவேண்டிய விதிப்பானது, பின்வருவனவற்றுக்கு அமைய அத்தகைய உள்ளூர் அதிகார சபையினால் தீர்மானிக்கப்படல் வேண்டும்; அதாவது :—

(அ) அத்தகைய உள்ளூரதிகார சபையானது, நீர், மின்சாரம், மலசலகூடம் ஆகிய வசதிகளோடு கூடிய பிரயாணிகளுக்கான நிழலிடமொன்றுக்கும் நேரப் பதிவாளர்களுக்கான அடைப்பொன்றுக்கும் அத்தகைய வசுத்தரிப்பு நிலையத்தில் ஏற்பாடு செய்திருக்கின்றவிடத்து, மாதமொன்றுக்கு ஒரு வசுவண்டிக்கு ஆகக்கூடியது நூறு ரூபா ; அத்துடன்

(ஆ) அத்தகைய உள்ளூரதிகார சபையானது, அத்தகைய வசுத் தரிப்பு நிலையத்தின் நோக்கங்களுக்காகக் காணியை மட்டும் ஏற்பாடு செய்து அத்துடன் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வசதிகளானவை மாவட்டக் கழகங்களினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவிடத்து, மாதமொன்றுக்கு ஒரு வசுவண்டிக்கு ஆகக்கூடியது ஐம்பது ரூபா ; அத்துடன் அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "கொடுப்பனவு எதையும் நேரடியாக அறவிடல் ஆகாது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(1) ஆம் உட்பிரிவின் கீழ் விதிகப்பட்ட விதிப்பனவு எதையும் நேரடியாக அறவிடல் ஆகாது". என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர் அரசாங்க வெளியீட்டலுவலகம் கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.